

பதிவுப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்.

விரோதிஸு (1889)
ஆவணி ௴ உ௨
ஆரம்பமானது.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்: ஸூ 1-க்கு	ரூ. 5-60
வெளியூர், இந்தியா: ,,	ரூ. 9-40
தொடுவாய்ப்பகுதி: ,,	ரூ. 9-40
தனிப்பிரதி:	சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன்முறைக்கு:—	ஒருகலம்	ரூ. 9-40
,,	அரைக்கலம்	ரூ. 5-00
,,	கால்கலம்	ரூ. 3-15
,,	ஒரு அங்குலம்	சதம் 65

அடுத்த முறைகட்கு மேல் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—நகூ. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சிஸு ஐப்பசி௴ உகவ; (1924 நவம்பர் 6) வியாழக்கிழமை. { இலக்கம்—நசு.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது ளாக்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேது
மதம்பூத்தவிநாயகன்றாள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக மூந்துயர் தீர்கவே.

தேக்க மரம்.

நங்கூனிலுள்ள பேர்போன அங்கிள கொம்பனியாரிடமிருந்து புதிகாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடி தொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம் வரையிலுள்ளன. இவை தொண்டமானாற்றிலும், யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள எமது கிட்டங்கி வளவிலும் பெற்றுக்கொள்ளலாம். விலை விபரத்திற்கு எமக்கெழுதவும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தந்திவிலாசம்:— தொண்டமானாறு.
ஊரி. வல்லுவேட்டித்துறை. (H. 29.)

அநேகபரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.
25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ் அண்டுமருந்துக்கண்காக்ஷியில் பஸ்கிளாஸ்(முதல்தர)தேவஔஷதங்களென்றதங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும்பெற்ற

1ST CLASS GOLD MEDAL AWARDED TO C. MALAYAPPA SAMI PALANI
BY THE TAMIL MEDICAL CONFERENCE AND EXHIBITION HELD IN MADRAS
1923

உள்ள நாளும் மறவாதது.

சூ[illegible]ம், ரணம்கைகது முதலிய
சகல வியாதிக்குங் , பத்ண்டது.
பழனி, சி. எம். சாமி

குரு தாம்பர பஸ்பம்.

முப்புவினுல் தளுக்கற நீற்றியது. களிப்பற்றது. வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது; பத்தியமில்லை. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

பலனில்லாவிடில் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். மறுமுறை வியாதி திரும்பிவராது. இது சகல வியாதிகளையும் வேரற நீக்கும் சக்தி வாய்ந்தது.

சூலை, குஷ்டம், திமிர், ரணம், மதமதப்பு, தடிப்புக்கள், கிரந்திகள், பத்துக்கள்,
கைகால் ரணங்கள், குன்மம், மேகம், பவுத்திரம், கண்டமாலை,
சூலைநீர், முதலிய சகல கர்மவியாதிகளும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும்.

குறைநோய் சம்பந்த வியாதிகள், விரல்கள் அழுகிப்போயிருந்தாலும் சரி, அம்மட்டில் ஆறிவிடும். இது குஷ்டம், கருமேகம், வெண்மேகம், செம்மேகம் முதலியவைகளுக்கு மகா அருமையானது. இதுபோன்ற மருந்து எங்கும் கிடைப்பதரிது.
80 வேளை மருந்து ரூ. 40. 40 வேளை மருந்து ரூ. 20. 20 வேளை மருந்து ரூ. 10
. ஏழைகளுக்குப் பாதி விலை. பிரபுக்களுக்கு விலை வேறு. வி. பி. சார்ஸ் பிரத்தியேகம்.

நற்சாட்சி:—திரேகமெல்லாமிருந்த மேகப் பத்துகள் இருந்த இடந் தெரியாமல் மறைந்துவிட்டன. கை, கால் விரல்களி லிருந்த ஆறாத மேக ரணங்கள் பூரா ஆறிவிட்டன. மூக வசீகரமும் பசியும் உண்டாயிருக்கின்றன. K. பழனியாண்டிபிள்ளை, செருத்தூர், லால்குடி, திருச்சி.

2 வருஷத்திற்குமுன் ஏற்பட்டிருந்த வாய்வு, மேகநீர் சம்பந்தம், வாதம், பவுத்திரம் இன்னும் பல வியாதிகளும் தங்கள் குருதாம்பரபஸ்பம் சாப்பிட்டதால் குணமாயின. இன்னும் கொஞ்சம் மருந்து சாப்பிட்டு முடிந்ததும் மெடலும் நற்சாக்ஷியும் அனுப்புகிறேன்
15—8—24.
தீ. ஆ. காத்தமுனிபிள்ளை,
உதகமண்டலம், நீலகிரி.

☞ வீரியவிர்த்திக்கு நிகரற்ற

மன்மத கோலாகல குளிகை.

அபூர்வ சக்தி வாய்ந்தது!! ⁂ ஆச்சரியமான குணமுள்ளது!!
புதிய நலத்தைக் காட்டும் போன பலத்தை மீட்கும்
ஒரு முறை பரீக்ஷிக்கவும்!! அதை இன்றே பார்க்கவும்!!

வீரியவிர்த்திக்கு இது நிகரற்றது. இதற்கு ஈடான மருந்து புவியிலெங்குமில்லை ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, போகசக்திக்குறைவு முதலியவைகள் நீங்கி நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி உண்டாகும். வீரியக்கட்டும், இழந்த பலமும், ஆண்மையுந் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. பரீக்ஷிக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.
120 குளிகை ரூ. 10 60 குளிகை ரூ. 5. 30 குளிகை ரூ. 3. மாதிரிக்கு 20 குளிகை ரூ. 2.
வி. பி. சார்ஜ் வேறு

திருச்சி கா. பி. மு. இப்ராம்ஸா 3-I-23-ல் எழுதுகிறார்:

தங்கள் மன்மதகோலாகல குளிகையைச் சாப்பிட்டதில் ரத்தத்தை சுத்திசெய்து நரம்புத்தளர்ச்சியை நீக்கி நல்ல பலத்தையும் வீரிய விருத்தியையும் கொடுத்து உற்சாகத்தையும் இன்பத்தையும் தருகிறது. இன்னும் 3-ரூபாய் குளிகை வி. பி. யில் அனுப்பவும்.

சித்த ஆயுர்வேத டாக்டர்
C. மலையப்பசாமி பிள்ளை,
நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

(Q (s) 46)

சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். [illegible] லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைரூத்தலுக்கு ரூபா ௧0. கால் ரூத்தலுக்கு ரூபா ௫ தாபற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினால் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்று,
மட்டுக்களப்பு,
சிலோன்.
(M. 36.)

பிரகடனம்.

ஸீனியர் வகுப்புக்குரியவை. 1924.

நிரைமீட்சிச்சருக்கம்: வில்லிபுத்தூரர் பாரதத்துள்ள இச்சருக்கம் பதவுரை, விசேடவுரை, சரித்திரச்சுருக்கம், நூலாசிரியர் வரலாறு, கதைச் சுருக்கம் முதலியவற்றுடன் விலை சதம் 75. (அணு 12.)

திருக்குறள் முதற்பத்ததிகாரம்: இப்பத்ததிகாரங்களும் தெளிபொருள்விளக்கப் பதவுரை, கருத்துரை, விசேடவுரை, ஆங்கில மொழி பெயர்ப்பு, திருவள்ளுவர் சரித்திரச் சுருக்கம் என்னுமிவற்றோடு விலை சதம் 50. (அணு 8.)

பெண்கல்வி: மாயூரம் வேதநாயகம்பிள்ளை எழுதிய இந்த அரிய வியாசம் திருத்தியும் புதுக்கியும் அரும்பதவிளக்கத்தோடு சுத்தப் பதிப்பாக வெளிவந்துள்ளது. பெண்கள்படிக்க வேண்டியது விலை சதம் 85. (அணு 14.)

ஜூனியர் வகுப்புக்குரியன. 1924.

நாலடியார் முதற் 15அதிகாரம்: இப்பதினைந்ததிகாரங்களும் பதவுரை, கருத்துரை, விசேடவுரை, இலக்கணக்குறிப்பு, ஆங்கிலமொழிபெயர்ப்பு என்னுமிவைகளுடன் விலை சதம் 75.

சிசுபாலசரி[illegible]ம் 50. (அணு 8.

மயானச[illegible]இயற்றிய அரிச்சந்தி[illegible]ம் பொழிப்புரை[illegible]புமுதலியவ[illegible]தப்பு களி[illegible]யுட் பாடு[illegible]50.

கத்[illegible]பாடு திரை[illegible]லவர் திருவருட்[illegible]சிந்த நடையிற்[illegible]நாவலாவர்கள்பாடு[illegible]தனம், பரமானந்தப்பு[illegible]க்தர் கீர்த்தனம், அகவல்[illegible]. விலைசதம்25.

சிவராத்திரிவிரதம[illegible]யம்: சிவராத்திரி விரதத்தை அனுட்டிக்கும் முறையையும் அனுட்டித்தோர் பெற்ற பேறுகளையும் பிறவற்றையும் வசனநடையிற் கூறுவது தோத்திரப்பாக்களுடன விலை சதம் 10. (அணு 2)

அதிகமாக வாங்குவோருக்குத் தருந்தகழிவு கொடுக்கப்படும். ஒரு ரூபாவிற்குக் குறைந்த புத்தகம் V. P. மூலமாக அனுப்பப்படமாட்டா.

Apply to
Pandit V. T. SAMBANDHAN,
Jaffna Hindu College,
Vannarpannai.
(Q 50.)

சரச விற்பனை.
புதிய சரக்கு.

தங்கமெடல்கள் பெற்ற இந்திய ஜவுளி வியாபாரிகள்.

எங்களிடம் மதுரை, கராச்சி, பனாஸ், பெங்களூர், கொர்நாடு, கும்பகோணம், காஞ்சிபுரம், சேலம் இன்னுமநேகவூர் ஜவுளித்தினுசுகள் பட்டு ஜரிகைகலந்ததும், சாதாநூல்கலந்ததுமான சேலைகளும், 12 முழம் தாவணிப் பாவாடை, ரவிக்கைகளும், கல்கத்தா நார்மடிகைசுகளும், வேஷ்டிகளும், புதுச்சேரி சேலை, தாவணி, துண்டுகளும், 150×200-ம் நம்பர் நூல்களில் வெள்ளை, பலகலர்களில் ஜரிகை கலந்த சேலைகளும், 12 முழம் தாவணிகளும், 6 முழம் துப்பட்டா (சால்வை) (6 7-8 10×6) முழம் மடிகளும் ஏராளமாய் இருக்கின்றன. ஒருதடவை ஆடர்கொடுத்தால் நயம் தெரியவரும்.

வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலம் அனுப்பப்படும்.

டி. ரேங்கசாமி அய்யர் அன்சன்ஸ்,
ஜவுளி வியாபாரிகள்,
கீழ்வெளி வீதி, மதுரை.

கிளைகள்:—மேலகோபுர வாசல், மதுரை.
16 A. அய்யாபிள்ளை தெரு, P. T.,
சென்னைபட்டினம்.
(ஜவுளி விலை ஜாபிதா இனாமாய் அனுப்படும்.)
(Q. 52)

கம்பளித் தினிசுகள்

உல்லன் மப்ளர். No-1.

உயர்ந்த வெள்ளை கம்பளிநூலால் பின்னப்பட்டது. அழகும், பளப்புமுள்ளது, இரண்டு முகத்திலையும் பட்டையான சிகப்பு, ஊதா, கறுப்பு, பிரௌன் முதலிய கரைகள் போட்டது.
2½ மு நீளம் ×8 இஞ் அகலம் ரூ. 3—8—0

உல்லன் மப்ளர் No-2.

வெள்ளை, காக்கி, கறுப்பு, சிகப்பு முதலிய கலர்களில் கிடைக்கும், கரைகள் கிடையா.
5 மு ×7 இஞ் வெள்ளை ரூபா 2—8—0
,, ,, கலர்களில் ரூபா 3—0—0

கம்பளிக் குல்லா.

கம்பளி நூலால் பின்னப்பட்டது, குளிருக்கு மிக்க அவசியமானது.
1 நீர் குல்லா ரூபா 2—8—0
2 நீர் குல்லா ரூபா 2—0—0

கம்பளிச் சட்டை.

முழுக்குக்கம்பளிநூலால் செய்யப்பட்டது. குளிருக்கு அடக்கமானது. தோட்டங்களில் உள்ளவர்களுக்கு மிக அவசியமானது
கிரேகலர் சட்டை 1க்கு ரூபா 4—8—0
,, பொத்தான் உள்ளது ,, ரூபா 5—0—0

கே. எஸ். மூத்தையா & கம்பனி,
"ஸில்க் ஹவுஸ்" காசி

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— இரத்தாட்சி௵
ஐப்பசி௴ 21உ வியாழக்கிழமை.

ஒருரூபா "நோட்டு."

இலங்கையிலே ஒருரூபா நோட்டு அதிகமாக வழங்கி வருகின்றது இந்த நோட்டு வழங்கத் தொடங்கியபின் வெள்ளி முழுரூபாவைக் காண்பது அரிதாய்விட்டது இந்தியாவிற்குப் பிரயாணஞ் செய்பவர்கள் மாத்திரம் அதிககஷ்டப்பட்டு முழுரூபா தேடிக் கொள்ளுகிறார்கள். மங்கலமான வெள்ளி ரூபா இலங்கையில் வழங்காமை இந்நாட்டின் தரித்திரத்திற்கு அறிகுறியாக விருக்கின்றது இந்த முழுரூபாக்கள் எங்குச் சென்று ஒளித்திருக்கின்றன வென்பது புலப்படவில்லை. ஒரு ரூபா நிறைகொண்ட கலப்பில்லாத வெள்ளி 80, 85 சதமாக வாங்கத்தக்கதாயிருப்பதால், கலப்புள்ள இந்த முழுரூபாக்களை இங்குள்ளார் உருக்கி ஆபரணஞ் செய்விக்கின்றார்களோ என நம்புதற்கு இடமில்லை.

அரசினர் நாணகங்களுக்குப் பதிலாகக் காகித நோட்டுகளை வெளியிடும்போது, வெளியிடப்படும் நோட்டுகளிலும்பார்க்க நாணகத்தின் தொகை அதிகமாக விருத்தல்வேண்டுமென்பது நியதியாகும். இலங்கையில் ஒரு சதம் ஐந்து சதம் பத்துச்சதம் இருபத்தைந்து சதம் ஐம்பது சதம் என்னுமித்தொகைகளைக் கொண்ட செம்பு நாணகமும் நிக்கல் நாணகமும் கலப்புவெள்ளி நாணகமும் மேலதிகமாக வழங்குகின்றன அதற்குமேல் ஒரு ரூபா, இரண்டு ரூபா. ஐந்து ரூபா, பத்து ரூபா, ஐம்பது ரூபா, நூறு ரூபா நோட்டுகளே பெரிதும் வழங்குகின்றன. இவைகளை உற்று நோக்கும்போது இலங்கையில் நாணகங்கள் குறைவென்பதும் காகிதநோட்டுகளே அதிகமென்பதும் நன்கு புலனாகும். இக்காலத்தில் நோட்டுகளை நாணகங்களாக மாற்றிக் கொள்வதற்குச் ச[illegible] ஷ்டத்தினாலும் இது நன்[illegible] ன் உண்மையை அ[illegible] வேண்டும்.

சென்[illegible] ய சட்ட நிரூபண[illegible] வெள்ளிரூப[illegible] து கேள[illegible] ழிய படி [illegible] தல் வேண்[illegible] ங்கள் ஒருரூப[illegible] ப்படுகின்றார்களில்[illegible] ட்டுகளைக் கச்சேரிகள[illegible] மிகவுங் கஷ்டமென்று[illegible] கௌரவ மிஸ்ரர் E. W. பெ[illegible] பாவைப் பழைமைபோல் அதிகமாக வெளியிட்டால் அந்த வெள்ளிரூபாக்களெல்லாம் இந்தியாவிற்குப் போய்விடுமென்றும் முழுரூபாவைச் சுமந்து செல்வது கஷ்டமென்றுங் கூறி மிஸ்ரர் வில்லியசிற்கு மாறாகப் பேசினர். சனங்கள் ஒருரூபா நோட்டிலே திருப்திப்பட்டிருப்பதினால் இச்சமையத்தில் இதுகாறும் இருந்தபடி இருக்க விடுவதே நல்லதென்றும், வெள்ளிரூபாக்களை அதிகமாக வெளிவிடுவதனால் வருவாய் குறையுமென்றும் அரசாங்க லிகிதர் கூறினர். அவ்வாறே அக்கூட்டத்தவரும் நிச்சயித்தனர்

இக்கூட்டத்தார் நிச்சயித்த பிரகாரம் அரசினர் ஒருரூபா நோட்டையன்றி வெள்ளி ரூபாவை அதிகமாக வெளியிடப்போவதில்லையென்பது வெளிப்படை. வெள்ளிரூபாவை அதிகமாக வெளியிடின் அவை இந்தியாவிற்குப் போய்விடும்; ஆனமையினாலே நோட்டைத்தான் வெளியிடவேண்டுமென மிஸ்ரர் பேறிஸ் சொன்ன நியாயம் தனக்கு மூக்குப்போனாலும் சத்துராதிக்குச் சகுனப் பிழையாயிருத்தல்வேண்டுமென்றவாறு இருக்கின்றது. இங்குள்ள தங்கப்பவுண்கள் இங்கிலாந்திற்குச் செல்வதைக்கண்டு பேசாதிருக்கும் மிஸ்ரர் பேறிஸ், எங்களுக்குச் சோறு தரும் இந்தியாவிற்குச் சில ரூபாக்கள் போவதைப் பொறுத்திருக்கவொண்ணாதா? மேலும் இந்தியாவிற்கு வெள்ளிரூபாவைக் கொண்டு போகும் விஷயத்தில் இலங்கை அரசினர் தக்க கட்டுப்பாடு செய்திருத்தலை மிஸ்ரர் பேறிஸ் அறியாரா?

இனி, ஒருரூபா நோட்டு வைத்திருப்பவர்கள் சிற்சில சமையங்களிற் பண மிருந்தும் இல்லாதவரின் நிலையி லிருக்கின்றார்கள். இங்கு வெளியிடப்படும் ஒருரூபா நோட்டுகள், ஏனைய நோட்டுகள் செய்யப்படுங் காகிதத்திலே செய்யப்படாமையினாலும், அதிகமாக உபயோக்கப்படுதலினாலும், சாமானிய சனங்களினாற் சுருட்டிச் சீலைத் தலைப்பிலே முடியப்படுதலினாலும், கையிலுள்ள வியர்வை படிதலினாலும் விரைவிற் கசங்குண்டு கிழிந்து அழுக்கடைந்து மிகவும் பரிதாபமான நிலைமையிற் காணப்படுகின்றன. இந்த நோட்டுகள், சிறிது கசங்குண்டால் சிறிது அழுக்கடைந்தால் சிறிது நலங்குண்டால் எவராயினும் ஏற்கின்றார்களில்லை. வியாபாரிகளாயுள்ளார் சாமானியசனங்களாயுள்ளார் மாத்திரமல்லர் புகைரதஸ்தானம் தபாற்கந்தோர் நீதிஸ்தலம் முதலிய அரசாங்க காரியஸ்தலங்களில் இருக்கும் உத்தியோகஸ்தர்களும் இந்த நிலையிலுள்ள நோட்டுகளை ஏற்கின்றார்களில்லை. இங்ஙனமிருத்தலினாலே சிலசில சமையங்களில், இந்த நோட்டைக் கொண்டு செல்வோர் பலவகையான கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் ஆளாகின்றனர்

சனங்களுக்கு நேர்ந்த இந்தக் கஷ்டத்தை அரசினரே நீக்குதல் வேண்டும் உயர்ந்த சாதிக் காகிதத்திலேயே இந்த ஒருரூபாநோட்டும் அச்சிடப்படுதல்வேண்டும். கள்ளநோட்டைக் கண்டாற்றவிர மற்றும் நோட்டுகள் கிழிந் திருப்பினும் நலங்குண்டிருப்பினும் கிழிந்து ஒட்டப்பட்டிருப்பினும் அரசாங்க உத்தியோகஸ்தானங்கள் எல்லாவற்றிலும் ஏற்கப்படவும் மாற்றப்படவும்தக்கஒழுங்கை அரசினர் செய்தல்வேண்டும் சனங்களும் சீலைத் தலைப்பில முடிதல் வியர்வையோடு பிடித்தல்முதலியனவைவிட்டு இயன்றவரையிற் சாவதானமாக இந்தநோட்டை வைத்து வழங்குதல்வேண்டும்.

தயிரின் குணம்.

இலங்கை அரசாங்க வைத்திய பகுதித் தலைவர் வெளியிட்ட 1923-ம் ஆண்டு அறிக்கைப்பத்திரத்தில், இலங்கையிலே தயிரை அதிகம் உண்ணுவதினாலே சிறுவரும் வளர்ந்தவர்களும் வயிற்றுவலி முதலிய நோய்களுக்கு ஆளாகின்றனரென்னுங் கருத்தமையக் கூறியிருக்கின்றார். "அளவிற்குமிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்றபிரகாரம் மிக்க நல்ல உணவுகளையும் அளவிற்கு மிஞ்சி உட்கொண்டால் அவற்றால் தீமை வருமென்பது மெய்யே. இலங்கையிலே தயிர் அதிகமாக உண்ணப்படுகின்றதென்ற கூற்றே சந்தேகத்திற்கிடமானது. இங்குள்ள சிங்களர் தமிழர் இஸ்லாமானவர் பறங்கியர் ஐரோப்பியரென்றிருப்பவருள் தமிழருட் சிலரே சுத்தபோசனிகள். அதாவது மச்சமாமிசமுண்ணாதவர்கள். இவர்களே பால் நெய் தயிர் மோர் என்னுமிவற்றை விரும்பியுண்பவர். மச்ச மாமிச போசனிகள் பெரும்பான்மையும் நெய் தயிர் என்னுமிவைகளை விரும்புவதில்லை. உணவோடு தயிர் கலந்து உண்டமையினாலே யாதும் நோய் ஏற்பட்டதாகத் தமிழ் வைத்தியர்களுள் எவரேனும் கூறக் கேட்டிலேம். அப்பியங்கனஞ் செய்யும் நாளிலே தயிர் உண்ணப்படுவதில்லை. அத் தினத்தில் உண்ணின் யாதும் நோயணுகுமென்பது வைத்தியர்களின் கொள்கை. தயிர் உணவைச் சீரணிக்கச்செய்து பெருந் தாகத்தை நீக்கி, தேகத்தில் எரிவிருப்பின் அவ்வெரிவை மாற்ற வல்லதென்று வைத்திய நூல்கள் கூறும். இனி, சரீரசுகத்திற்குத் தயிர் பிரதானமானதென்பது பின்வருஞ் செய்யுளால் இனிது விளங்கும்:

'மாதத் திரண்டிலிசை மாதரைப் புல்குவது
மறுவறு விரோசனந் தான்
வருஷத் திரண்டிலிசை தைலந் தலைக்கிடுதல்
வாரத் திரண்டி லிசைவாம்
முதநிலி னொருதினந வயிறுக் கிளைப்பொரு
மொய்குழ லுடனிசை யோகம்
முந்துதயிர் காய்ச்சுபால் நீர்மோர் உருக்குநெய்
முதிரா வழுக்கை யிளநீர்
சாதத்தி லெவ் வளவானதும் புசித்தபின்
தாகந் தனக்கு வாங்கல்
தகையாக வுண்டபின் உலாவ லிவை
சரீரசுக மாமென்பர் காண்
……………………………………"

அன்றியும், தேரையர் நோயணுகா விதியிலும்:

"……………………………………
மூலஞ்சேர்கறிநுகரோம்மூத்ததயிருண்போம், முதனாளிற் சமைத்தகறி அமுதெனினும் அருந்தோம், ஞாலந்தான் வந்திடினும் பசித்தொழிய வுண்ணோம், நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்குமிடத்தே".

எனக் கூறியுள்ளனர்.

இங்ஙனமிருப்பவும் நமது வைத்தியத் தலைவர் தயிர்மீது தோஷஞ்சுமத்துவது யாதுகாரணம்பற்றியோ வறிகிலேம். மேலும், இங்குள்ளார் தயிரிலும்பார்க்க மோரையே பெரிதும் விரும்பி உட்கொள்ளுகின்றனர். மோர்தேகசுகத்திற்கு இன்றியமையாததென்பர். '—உண்ணுங்கால், நீர்சுருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம், பேருரைக்கிற் போமே பிணி'' என ஆன்றோர் கூறிப்போந்தனர். இக்காலத்திலுள்ளார் தயிர் மோர் முதலிய அரிய உணவுகளை யொழித்துவிட்டுக் குழந்தைகளுக்கு "மெலின்ஸ்'' ஆகாரம், "மோட்டன்ஸ்'' ஆகாரம் முதலிய நவீன உணவுகளை யூட்டியும், தாங்கள் தாகமுற்றகாலத்தும் உறுதகாலத்தும் காப்பி தேயிலை கொக்கோ என்னும் நவீன பானங்களை அருந்தியும் நோய்களைத் தேடிக்கொள்ளுகின்றனரென்பதை அரசாங்க வைத்திய பகுதித்தலைவரும் நவீன நாகரிகத்தின்பாற் பட்டாரும் அறிதல் வேண்டும்.

உலகம் பலவிதம்.

"சூரபத்மன் பெலமும் இராவணன் திறமும்
அதிகமான கஞ்சன் வலியும்
திடமான இரணியன் வரப்ரசாதங்களும்
தொலையாத வாலி திடமும்
பாரமிகு துரியோதனன் றிறற் றவாத
பராக்கிரமம் மதுகைடவர்
பாரிப்பும் மாபலிதன் ஆண்மையும் சோமுகன்
பாங்கினுறு வல்லமைகளும்
ஏனைய சேகன் கனதையுந் திரிபுரர்
எண்ணமுந் தக்கன் எழிலும்
இவர்களது சம்பத்தும் நின்றதோ அவரவர்
இடும்பால் அழிந்த வன்றோ"

எக்காலத்திலும் நன்மையைத் தீமையும் கருமத்தை அகருமமும் நீதியை அநீதியும் வெல்லமாட்டா. காலபேதத்தினால் நல்லோரும் தீயோரால் இடுக்கணுறுவர் ஆனால் நல்லோர் மனம் வருந்தினால் அது வீண்போகாது. "அழுத கண்ணீர் கூரியவாளொக்கு"மென்பர். ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகங்களாக அரசாண்ட சூரபன்மன் அரிபிரமேந்திராதி முப்பத்துமுக்கோடி தேவர்களை யாதும் காரணமின்றி வருத்தினான். அவர்களைக்கொண்டு செய்பத்தகாத குற்றேவல்களெல்லாஞ் செய்வித்தான். அவர்களைக் கேள்விமுறையின்றிக் காராக்கிரகத்தில் இடுவித்தான். அத்தேவர்களிட்ட ஓலம் வீண்போகவில்லை. அத்தேவர்கட்கு நேர்ந்த இன்னலை நீக்கும்படி திருவவதாரஞ்செய்தருளிய சுப்பிரமணியக்கடவுள் அனுப்பத் தூதாகச் சென்ற வீரவாகுதேவர் சூரனுடைய தலைநகராகிய மகேந்திரபுரியில் இந்திரகுமாரனாகிய சயந்தன் முதலியோர் சிறைச்சாலையிற் கிடந்து புலம்புவதைக் கண்டார். அவர்கள் அங்கேபட்ட பாட்டைக் கண்ட வீரவாகுதேவர் மனம் தரித்திலராய்ப் பெரிதும் வருந்திப் பின்வருமாறுகூறினர்:

"மெய்ச்சோதி தங்கு சிறுகொள்ளி தன்னை
விரவின்மை கொண்ட குருகார்
சச்சோத மென்று கொடுதன் குரம்பை
தனில்வைத்து மாண்ட கதைபோல்
அச்சோ வெனப்பல் இமையோரை ஈண்டு
சிறைவைத்த பாவ மதனால்
இச்சூர பன்மன் முடிவெய்து நாளை
இதனுக்கொர் ஐய மிலையே".

சொக்கானது பேதந் தெரியாமல் மின்மினிப்பூச்சியென்றெண்ணிச் சிறிய நெருப்புக்கொள்ளியைக் கொண்டுபோய்த் தன் கூட்டில் வைத்துத் தானும் தன் கூடும் எரிந்து நாசமான தன்மைபோல் இந்தச் சூரபன்மன் யாதொரு குற்றமுமில்லாத தேவர்களை இங்கே கொண்டுவந்து சிறைவைத்து வருத்துகின்றமையினால் இவன் விரைவில் தன் கிளையோடு மாண்டுபோவது திண்ணம் என்பதாம். சூரபன்மன் தேவர்கட்குச் செய்த இடுக்கண் காரணமாக அறுமுகக்கடவுளின் ஏவிய வேற்படையினால் மாண்டான்.

* * *

இலங்கைக் கிறைவனாயிருந்த இராவணன் தேவர்கட்கு இடர்விளைத்துச் சீதையைச் சிறையிடையுய்த்து ஈற்றில் இராமபாணத்திற் கிரையானான். கஞ்சன் தன் மைத்துனனாகிய வசுதேவருக்கும் அவர் புதல்வனாகிய கண்ணபிரானுக்குந் தீமை விளைக்கக் கருதி ஈற்றில் அக்கண்ணபிரானால் இறுதியெய்தினன். இரணியன் தானே பரப்பிரமமென்று கூறி அகந்தையுற்று இறுதியில் நரசிம்மமூர்த்தியாற் கிழித்துக் கொல்லப்பட்டான். பராக்கிரமத்தில் ஒப்பாரும் மிக்காருமில்லாத வானரர் குலத் தலைவனாகிய வாலி தன் தம்பியாகிய சுக்கிரீவனுக்கு இடர்செய்யப் புகுந்து ஸ்ரீராமரால் வதையுண்டான். வணங்காமுடியோனாகிய துரியோதனன் தன் தம்பியாருடன் பஞ்சபாண்டவர்க்குத் தீமைவிளைத்துச் சுற்றத்தாரோடு மாண்டான். இப்படியே மதுகைடவர் மாகாவலிச்சக்கரவர்த்தி சோமுகாசுரன் சேகன் திரிபுரத்தவர் தக்கன் என்னுமிவர்கள் தங்களுக்குக் கிடைத்த அதிகாரத்தினால் அகந்தைகொண்டு பிறர்க்குத் தீமை விளைக்கப் புகுந்து ஈற்றில் தாங்களே நாசமடைந்தனர்.

* * *

இவைகளெல்லாம் பூர்வகாலத்தில் நடந்த சம்பவங்களாதலினாற் சிலர் இவற்றின் உண்மையைக் குறித்துச் சந்தேகமுறுதலுங்கூடும். ஆனாற் பிற்காலத்திலே நிகழ்ந்த சம்பவங்களைச் சிந்திப்போம். ஐரோப்பாக்கண்டம் முழுவதையும் நடுங்கச் செய்த நெப்போலியன் பொனப்பாட் எங்கே! அவருடைய பராக்கிரமமும் நுண்ணிய விவேகமும் எங்கே! தமது வாயிலிருந்து பிறக்கும் வார்த்தையே கட்டளைச்சட்டமென்னுங் கொள்கையுடன் ருஷியா தேசத்தை அரசாண்ட ஸார் சக்கரவர்த்தியின் கதி என்னவாக முடிந்தது! செல்வத்திலும் பராக்கிரமத்திலும் படைவலி துணைவலியிலும் சிறந்து விளங்கிய ஜர்மனிய சக்கரவர்த்தியாகிய கெயிசர் இப்பொழுது எங்கிருக்கின்றார்

ஒருசாதியார் பரிபாலிப்பதும் இன்னொரு சாதியார் அவரால் பரிபாலிக்கப்படுதலும் முறையே அவ்வச் சாதியார் செய்துகொண்ட புண்ணிய நிறைவு குறைவுகளைப் பொறுத்தனவாம். புண்ணியவழியா லீட்டிய அதிகாரத்தை நீதியோடு செலுத்துவதன்றித் துர்விநியோகஞ் செய்யின் அதனை இழந்துவிடவேண்டி நேரிடும். மேலும் இந்த உலகத்திலே அரசனிடத்துள்ள பொறுப்புப்போற் பாரமான பொறுப்பு வேறெவரிடத்துமில்லையாம். அரசனே இம்மையிற் கண்கண்ட தெய்வம். அரசன் தெய்விகமானவனென்ற கொள்கை ஆங்கிலர் முதலிய ஐரோப்பியசாதியார்மாட்டும் இருக்கின்றது. தமிழ்ப்பாஷையிலுள்ள நீதிநூல்களெல்லாம் அரசனுக்கென்றே விசேஷமாக இயற்றப்பெற்றன. அவற்றை ஏனையரும் பின்பற்றுவர். அரசன் தன் கடமையை மறந்து பிரசைகள்மீது சந்தேகங்கொண்டு அவர்களுடன் மாறுபடுவானேல், அது அவன் முடிவிற்கு ஓர் அறிகுறியாகுமெனச் சாஸ்திரங்கள் கூறும். அனுபவத்திலும் அவ்வுண்மை காணத்தக்கது. அரசன் அன்னைபோலவும் குடிகள் பிள்ளைகள்போலவும் பரஸ்பரம் அன்புடையவர்களாய் ஒழுகுதல்வேண்டும். இந்துக்கள் அரசனை ஐங்குரவருள் ஒருவராக மதித்துப் பூசிப்பர். அரசன் தன் பிரசைகளுக்கு வந்த துன்பத்தைத் தனக்கு வந்த துன்பமாக மதித்தொழுகுவனேல், பிரசைகளும் அரசனுக்கு வந்த துன்பத்தைத் தமக்கு வந்த துன்பமாக மதித்து நடப்பர். அரசன் தானே பிரசைகளுக்கு இடர்விளைக்கப் புகுவனேல் வேலி பயிரை மேய நினைந்தவாறுபோலாகும். "வேந்தன் சீறின் ஆர்துணையில்லை'' என்பர்.

* * *

பாரதபுத்திரர்கள் தங்கள் பிறப்புரிமையாகிய சுவதந்திரத்தை விரும்பி நெடுங்காலமாகப் பெரிதும் பாடுபட்டு வருகின்றார்கள். பாரதபுத்திரர் மாத்திரமல்லர்; உலகத்திலே எச்சாதியாரும் சுவதந்திரத்தை விரும்புகின்றார்கள். இங்ஙன[illegible] விரும்பிய சாதியாருட் பலர் சு[illegible] ரத்தைப் [illegible] திய சா[illegible] பரிபாலி[illegible] தை கந்[illegible] மல்லர் [illegible] நீர்வாழ்வன முத[illegible] களும் சுவதந்திரத்தையே நாடுகின்றன. நாவியைக் கூட்டில் விட்டு அடைத்து எவ்வாறு போஷிப்பினும் அது புறப்பட்டு வெளியே போதற்கே முயன்றுகொண்டு கூட்டினுள் ஓடித்திரிகின்றது. சமையம் வாய்த்தவுடனே ஓடித் தப்பிவிடுகின்றது. கிளி நாகணவாய் புறவம் என்னு மிவைகளைக் கூண்டில் அடைத்து ஆருமூட்டினாலும் அப்பறவைகள் சமையம் வாய்த்தவுடனே பறந்துவிடுகின்றனவல்லவா. அதுபற்றியே வளர்ப்போர் அப்பறவைகளின் சிறகைக் கத்தரித்துவிடுகின்றார்கள். பெட்டியிலுள்ள பாம்பைத் திறந்துவிட்டால் அது தானாக மீண்டு அப்பெட்டியுட் புக விரும்பாதன்றோ. நீரிலுள்ள ஆமையைக் கொடுவந்து மெத்தையில் வைத்தாலும் அது அந்நீரையே நாடிச் செல்லும். இவைகளின் இச்செயல்களை உற்று நோக்கும்போது, சீவசெந்துக்களெல்லாம் சுவதந்திரத்தை அபேட்சித்து நிற்கின்றனவென்பது நன்கு புலப்படும். பாரத புத்திரர், அன்னையைக் குழந்தை முலைப்பால் கேட்பதுபோல, தங்கள் பிறப்புரிமையாகிய சுவதந்திரத்தைத் தரும்படி அதிகாரிகளை இரந்துவருகின்றனர். அதனைப் பெறுதற்குச் சாந்தமான வழிகளை அநுசரித்துவருகின்றனர். அதிகாரிகட்கு உபசாரவார்த்தை கூறுகின்றனர். அவர்களுடன் நியாயம்பேசுகின்றனர். வாதாடுகின்றனர். ஆனால் இவைகளெல்லாம் காட்டிற்றெறித்த நிலாப்போல் அதிகாரிகளிடத்துப் பயன்படாதொழிந்தன. நித்திரையாகக் கிடப்பவனைத் துயிலுணர்த்த முடியுமன்றி நித்திரைபோற் கிடப்பவனைத் துயிலுணர்த்த முடியுமா? முடியாது! அதிகாரிகள் பாரதபுத்திரருக்கு அவர்கள் பிறப்புரிமையைக் கொடுத்தற்குச் சித்தமில்லாதிருக்கும்போது இவர்கள் அழுதாற் பயனென்ன, நொந்தாற் பயனென்ன; ஆவதில்லை. மேலும் மேலும் இவர்கள் அவர்களை நெருக்கி இரக்கவே அவர்கட்குச் சினம் மூண்டுவிட்டது. வங்காளத்தில் எத்தனையோ சனத்தலைவர்கள் இராசதுரோகிகளென்னுங் குற்றம்பாரிக்கப்பட்டுச் சிறையிடப்பட்டனர். அரசினர் அடக்குமுறை ஆநந்தத்தாண்டவம் புரிகின்றது. அரசினர் ஆநந்த பாஷ்பஞ் சொரியக் குடிகள் கண்ணீருங் கம்பலையுமாக விருக்கின்றனர். இந்திய அரசாங்கத்தில் இப்பெரும் மாறுதல் ஏற்பட்டிருத்தல் நன்மைக்கோ தீமைக்கோ நாமறியேம்.

சமாசாரம்.

காலநிலை.

இங்கு ஒவ்வொருநாளும் நன்மழைவருஷிக்கின்றது. இரவில் குளிர் அதிகம்.

சச்சிதாநந்த ராஜயோகிகளின் சற்பிரசங்கம்.

யோகிகள் இந்தமீ 21-ந் உ (9-11-24 வருகிற) ஞாயிற்றுக்கிழமை இரவு சுன்னாகம் ஐயனார்கோயில் வசந்தமண்டபத்திலே, புனிதவதியாரென்னும் காரைக்காலம்மையாருடைய திவ்வியசரித்திரத்தைப் பக்கவாத்திய சகிதமாகப் பிரசங்கம் செய்வார்கள்.

சட்டநிருபணசபை.

இச்சபையின் கூட்டம் ஒன்று சென்ற செவ்வாய்க்கிழமை கூடியது. அந்தருணம் ஷெ சபையின் உப அக்கிராசனராகிய கௌரவ ஜேம்ஸ் பீரிஸ் அவர்கள் அக்கிராசனம் வகித்தனர். கௌரவ மிஸ்டர் ஈ. ஆர். தம்பிமுத்து அவர்கள் ஏழைகளை இதுகாறும் வருத்திவருவதாகிய ஆட்பணவரியை நீக்கும்பொருட்டு அடுத்தகூட்டத்தில் பிரேரிப்பதாகத் தெரிவித்தனர்.

சச்சிதாநந்த ராஜயோகிகளின் சற்கருமம்.

யோகிகளின் நன்முயற்சியினால் புரோக்கர் ஸ்ரீ ம. மூத்ததம்பியவர்களுடைய திருமடத்திலே கந்தஷஷ்டி விரதகாலங்களில் அங்குவரும் அடியார்களுக்கு ஸ்ரீ விசுவலிங்கம் அவர்களால் இளநீர் பழம் சருக்கரை முதலியன வழங்கப்பட்டன. சூரசம்மாரதினத்தின் மறுநாள் நூற்றுக்கணக்கான அடியார்களுக்கு அன்னதானம் செய்யப்பட்டது. இத்தருமம் வருடந்தோறும் கந்தஷஷ்டி விரதகாலங்களில் நடைபெறும்வண்ணம் சிவசுப்பிரமணியப் பெருமான் திருவருள் பாலிப்பாராக.

கோட்டிலே குடும்ப கலகம்

சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டிலே ஒருபெண் தன்னுடைய நாயகன் தன்னை தாபரியாமையினாலே அவன்மீது வழக்குத்தொடர்ந்தாள். நீதிபதி றைப்பாட்டைவற் பெண் அழைப் ருடையமேசை னள். இதனை அ ஓடிச்சென்று தனக்கு வழக்குத் தொடர்ந்த காரணம் யாதெனக்கூறி மனைவியைச் சருவினன். கோட்டிலே கலகமிட்டதற்காக நீதிபதி அவனுக்குப் பதினைந்துரூபா அபராதம் விதித்தனர்.

கழனிகங்கை இருப்புப்பாதையில் நிலச்சரிவு.

சென்ற வெள்ளிக்கிழமைகாலை நுகைக்கோடைக்குச் சமீபமாயுள்ள இருப்புப்பாதையில் பெருமழைகாரணமாக நிலச்சரிவுண்டாயது. ஒருபுகைவண்டி தண்டவாளத்திலிருந்து கீழே இறங்கியது.

ஒரு சிறுவன் நெருப்புடன் விளையாடினான்.

கண்டியிலே மிஸ்டர் வன்றேக் என்பவருடைய சிறுவன் ஒருவன் கொளுத்திய மெழுகுவர்த்தியுடன் மேல்வீட்டுக்குச் சென்று அங்குள்ள அலுமாரியைத்திறந்து ஏதோ எடுக்கும்பொழுது அலுமாரிக்குள்ளிருந்த சீலையில் நெருப்புப்பற்றியது. சிறுவன் அதனை அறியாதவனாய் அலுமாரிக்கதவைச் சாத்தியபின் கீழே இறங்கினான். சற்றுவேளையில் அலுமாரி அக்கினிமயமாகி வீட்டுக்கூரைவழியாகப் புகை வெளிப்பட்டது. பக்கத்திலுள்ளோர் அதனைக்கண்டு கூக்குரலிட்டு விரைந்தோடிச்சென்று நெருப்பைத் தணித்தமையினால் வீடு அக்கினிக்கிரையாகாது தப்பியது.

விவாகம்.

கொக்குவில்சோதிடபரிபாலனமடவாக்கியபஞ்சாங்க கணிதர் பிரம்மஸ்ரீ ச. இ. சிவராமலிங்கையர் அவர்களின் சிரேஷ்ட புத்திரன் பிரம்மஸ்ரீ இரகுநாத ஐயருக்குப், திரிகோணமலை பிரம்மஸ்ரீ அ. கனகசபாபதிக்குருக்களின் புத்திரி ஸ்ரீமதி கமலாம்பிகை அம்மாளுக்கும் இந்த ஐப்பசிமீ ௭௨ வியாழக்கிழமை இரவு ௭ மணிக்குமேல் வந்த இடபலக்கின சுபமுகூர்த்தத்திலே திரிகோணமலையில் மணமகளின் கிருகத்தில் திருமங்கலியதாரண விவாகக் கொண்டாட்டம் மிகவுஞ் சிறப்பபாக நிறைவேறியது. தம்பதிகள் திரிகோணமலையிலிருந்து (ஐப்பசிமீ ௨௨) நாளைப்பிற்பகல் ௪ மணியளவில் கொக்குவிலிலுள்ள மணமகன் கிருகத்துக்கு வருவார்களென்றும், அத்தருணம் அங்கே விவாக கொண்டாட்டம் நடைபெறுமென்றும் அறிகின்றோம். இப்புதிய தம்பதிகள் சகல ஐஸ்வரியங்களும் பெற்று இனிதுவாழும்வண்ணம் இறைவன் அருள்புரிவாராக.

அவனும் புலியைச் சுட்டான் புலியும் அவனைக் கொன்றது.

திரிகோணமலையைச் சேர்ந்த அலுத்ஓயா என்ற இடத்திலே ஒருவருடைய ஆடுகளை அங்குள்ள புலி ஒன்று ஒவ்வொருநாளும் பிடித்துத் தின்றுவந்தது. டிங்கிரி அப்பு என்னும் ஒரு வாலிபன் அப்புலியைச் சுட்டுக் கொல்லும்பொருட்டு ஒருமரத்தின்மேலேறி அங்கு ஓர் பரண் அமைத்துப் புலியின் வரவை எதிர்நோக்கித் துவக்குடன் இருந்தான். சிறிதுநேரஞ் சென்றவுடன் வழமைபோல அப்புலி ஆடுகள் நிற்கும் இடத்தைச் சேர்ந்தது. உடனே வாலிபன் புலியைச் சுட்டான். துவக்குவெடியின் அதிர்ச்சியினால் தாக்கப்பட்ட அவ்வாலிபன் நிலைதளர்ந்து கீழே விழுந்தான். புலியும் அவனைக் கொன்றது.

காதல் தூக்குமரத்துக்குவழிகாட்டியது.

சிலமாதங்களுக்குமுன் இரத்தினபுரியிலே மல்காமி என்னும் ஒரு சிங்களவாலிபன் அங்குள்ள 17 வயதுள்ள ஒரு சிங்களப்பெண்ணை விவாகஞ்செய்ய விரும்பினான். பெண்ணின் பெற்றாருக்கு அவ்விவாகம் சம்மதமில்லாதிருந்தது. மலிகாமி அவளையே விவாகஞ்செய்வதென உறுதிசெய்து அப்பெண்ணுக்கும் தன் தீர்மானத்தை வெளிப்படுத்தினான். அவள் மறுத்தனள். இதனை அறிந்த பெற்றார் அப்புகாமி என்னும் வேறொருவனுக்கு அப்பெண்ணை விவாகம் செய்துகொடுக்க ஒழுங்குசெய்து முறையான விவாக விளம்பரத்தை நிறைவேற்றினர். இதனை அறிந்த மலிகாமி என்பவன் அப்பெண்ணிடம்சென்று தன்னை விவாகஞ்செய்துகொள்ளும்படி வற்புறுத்தினன். பின்னரும் அவள் மறுத்தனள். மலிகாமி என்பவன் காதல்என்னும் பைசாசத்தினாலேவப்பட்டு உடனே அப்பெண்ணைக் கத்தியினாற் குற்றிக்கொன்றான். இவ்வழக்குக் கொழும்புச் சுப்பிறீங்கோட்டிலே விசாரணைசெய்யப்பெற்று எதிரியாகிய மலிகாமி என்பவன் மரணத்தீர்ப்பு விதிக்கப்பெற்றான். எதிரி கூட்டிலிருந்து கீழே இறங்கும்பொழுது மூன்றுமுறை "சாது சாது" என்று உரத்துச் சத்தமிட்டான். இவ்விதம் கொலை செய்யுமுன் ஒருதரமேனும் கூறியிருப்பனேல் இக்கதிக்காளாகமாட்டான்.

தீபாவலியும் விவேகாநந்த சைவப்பாடசாலையும்

மட்டக்களப்புக் கல்லடி உப்போடையிற் சைவசமயவறிவு வளர்ச்சியையிலக்காக்கி யெழுந்தவோர் வாலிப வியக்கமாகிய ஸ்ரீகணேசானந்த வாசிகசாலை, ஓர் கணேசாலயத்தையுமோர் விவேகானந்த பாடசாலையையுந் தனக்கணித்தே கொண்டுள்ளதென்பது எங்கும் பிரஸ்தாபம் நிற்க.

இந்துக்களின் விசேஷபண்டிகைகளுளொன்றாகிய தீபாவலிக்காகச் சென்ற மாசம் 27 திகதியாகிய திங்கட்கிழமையன்று கிறிஸ்தவ ஆங்கில பாடசாலைகளெல்லாம் விடுதலையடைந்திருந்தமையும், கல்லடி உப்போடை விவேகானந்த சைவப்பாடசாலைக்கு மாணவர் வழக்கம்போற் சென்றுகொண்டிருந்தமையும் கண்டு எம்மனம் புண்பட்டது. இவ்வாறு சைவவித்தியாலயங்களிற் சைவசமயத்துக்குரிய பண்டிகைகள், விழாக்கள் முதலியன அலட்சியம் பண்ணப்பட்டால் நாமெங்ஙனஞ் சைவசமயிகளென்றழைக்கப்படுதற்குருகராவோமோ? நம்மூரெக்காலம் முன்னேற்றமடையுமோ? அறியேம்.

—கணேசன்.

நவீன நாகரீக விவாகமுறையின் முடிவு

குருநாகலைச் சேர்ந்த வெலப்பலா என்னும் கிராம ஆராய்ச்சியின் மகனாகிய குணசேகர என்னும் ஒருவன் அங்குள்ள பேபிநோனா என்பவளிடம் காதலுற்றலாயினன். இருவரும் விவாகம் செய்து கொள்வதாக உறுதி செய்துகொண்டனர். குணசேகரா என்பவன் ஒருநாளிரவு பேபிநோனா என்பவளை அவளுடைய பெற்றோர் அறியாவண்ணம் தன்வசப்படுத்தி அழைத்துச் சென்று மறைத்தனன். ஒருவாரம் சென்றபின் அவர்களிருக்குமிடம் வெளியாயது. பெண்ணின் பெற்றோரால் வழக்குத் தொடரப்பட்டது. விசாரணை செய்யப்பட்டபொழுது அப்பெண், தன்னுடைய பெற்றோர் தன்னைக் கொடூரமாக நடத்தியமையினாலேதான் அவ்விதம் நேர்ந்ததெனப் பெற்றோர்மேற் குற்றம் சுமத்தினள். குணசேகரா என்பவனை விசாரணை செய்தபொழுது அவன் இந்தப்பெண்ணுக்கும் தனக்கும் ஒருவித சம்பந்தமும் இல்லை என்றும், பெண்ணின் பெற்றோர் அப்பெண்ணைத் தனக்கு விவாகஞ்செய்து வைப்பதற்காக இப்பொய் வழக்கைத் தொடர்ந்திருக்கிறார்கள் என்றும் கூறினான். தனது கருமம் மோசமாக முடிந்தமை கண்ட அப்பெண் முன்னர்க்கூறியதற்கு நேர்விரோதமாக, பெற்றோர் தன்னைக் கொடூரமாக நடத்தவில்லையென்றும், குணசேகரா என்பவன் தன்னை விவாகஞ்செய்வதாக வாக்களித்தபின் வலித்து அழைத்துச் சென்றான் என்றும் காதலன்மேற் குற்றம் சுமத்தினள். அவளுடைய வார்த்தையைக் கேட்ட நீதிபதி குணசேகரா என்பவனை நிரபராதியாக்கி வழக்கைத் தள்ளி விட்டனர். பேபிநோனா அங்குங் கெட்டாள் இங்கும் கெட்டாள்.

காயத்தின் அநித்தியம்.

(வண்ணை நகர்
ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை
எழுதியது)

மலரோ னாகிய மரவினை யாளன்
எமதுடல் என்னும் எண்சாண் மனையை
இயற்ற நினைந்து இருதாண் நிறுத்தி
முதுகெலும் பாகிய முரண்வலை வைத்து
பக்க எலும்பெனுங் கைமரம் பரப்பி
நரம்புக் கயிற்றால் நன்றாய் வரிந்து
தோலால் வேய்ந்து தசைச்சுவர் எழுப்பி
மேலுள மாடியில் வெளிச்சம் பெறுதற்குச்
சாளரம் இரண்டு சதிருடன் அமைத்து
வாயு வெளியிலும் உள்ளிலு மிருந்து
வருதற் கிரண்டு வாயில்கள் வகுத்து
இன்னிசை உணர்ந்த இரண்டு வாயிலும்
அந்தக் கியைந்த பொருள்களை அனுப்ப
இருகத வுடைய முகப்பு வாயிலையும்
கீழ்வா ரத்தில் கிருகத் தசுத்தஞ்
சழிவதற் கிரண்டு கால்களும் அமைத்து
வனப்புற இயற்றி வைத்திட் டனனே!
வயங்கும் அம்மனையை மனைவர் ஐவர்
ஐக்கியம் இன்றி ஆளுகின் றார்கள்
கணந்தொறும் ஒருவர் ஒருவரைக் கடிந்து
தனித்தனி ஆளச் சமருடற் றிடுவர்!
சண்டனென் றுரைக்குந் தறுகணன் வந்து
ஐந்து வேந்தரையும் அட்டரண் பனையையும்
சூறை யாடித் தொலைத்திடு வானே!
இத்தகை யுடையவிம் மாளிகை வெளிப்புறங்
கண்டவர் கண்களைக் கவரத் தகுந்த
சட்டமு முடையதாய்க் காணப் படினும்
உட்புறம் அதனைப் பார்த்திடில் உதிரம்.
கோழை மூளை குடர்சுக் கிலமலம்
மூத்திரம் நிறைந்த பாத்திரம் ஒக்குமே!
இச்சரீ ரத்துள் சருக்கரை தேன்பால
சீனி கற்கண்டு சிறந்த முப்பழங்கள்
ஆகிய மதுர மானநற் பொருள்களை
இட்டு நிரப்பில் எவர்களுங் கண்டு
அருவருத் திகழ்ந்து அகற்றிடு கின்ற
மலமாய் மாறி வருகின்ற தன்றோ?
மாசது நீங்க வடிகட் டியநன்
னீரைப் பருகிடில் ஒருநிமி ஷத்தினில்
உவர்நீர் ஆகி ஓடிடு கின்றதே!
மதிபோல் வெள்ளை வஸ்திரந் தன்னை
அணிந்திடில் அன்றே அழுக்காய் விடுமே!
ஒருநாட் குளியா துறைந்திடில் வியர்வையால்
நனைந்து கற்றாழை நாற்றம் எய்திடுமே!
இன்னுமிச் சரீர நிலையினை நோக்கின்
மட்கலம் போல வைகலு மிது
அழியுங் காறும் பயம் அகலாதே!
இதுபற்றி யன்றோ இச்சரீ ரத்தை
நீர்மேற் குமிழி நீரெழுத் தென்றும்
இந்திர தனுவை நிகர்த்திடும் என்றும்
சுமக் கனவுக் கிடுவிற தென்றும்
காமக் கனலிற் கரிசரு தென்றும்
பாவக் கொழுந்து படர்கொம் பென்றும்
ஆசைக் கயிற்றில் ஆடிடு கின்ற
பம்பரம் எனறும் பகடைக் கூற்றன்
விதிவழி வெட்டுங் கட்டையாம் என்றும்
பரிதி முற்பட்ட பனித்திரள் என்றுஞ்
சதுர்முகன் தைத்த சட்டையீ தென்றும்
குலவுகாற் றெதிரே குவித்து வைத்திட்ட
பஞ்சின் குவியலாம் என்றுங் காற்றுக்கு
எதிரே தூற்றும் பதராம் என்றும்
இன்னும் அநேகமாய் இவ்வுடல் நிலையை
ஏதமில் சான்றோர் இழித்துக் கூறினர்!
அளவிலா இந்திரர் அலகிலாப் பிரமர்
எண்ணிலா நாரணர் இறந்தொழிந் தனரே!
தூயவிப் பெரியோர் துஞ்சினர் என்றால்
எம்மவர் நிலையை வியம்பவும் வேண்டுமோ?
நண்பரே ஒன்று நவிலுவன் கேண்மின்!
மனத்தினில் எண்ணி வந்த வேலைகளைச்
செய்யா தடர்த்துத் தீயரோ டிணங்கி
பசுரும் வெள்ளரிப் பழத்தினுக்குப் பூண்
இட்டது போல ஏழைகள் கதறத்
தீமைகள் புரிந்து செல்வத்தை ஈட்டித்
தாரணி வாழ்வைச் சதமென நினைந்து
அல்லும் பகலும் அரிவையர் மோகத்
தழுந்தி நரகினுக் காளா காது
அடியார்க் கடியனை ஆலங் குடியனை
நெற்றி நாட்டனை நின்மல வீட்டனை
அம்பிகை பாகனை அருட்பிர வாகனை
மதகரி யுரியனை மாலயற் கரியனை
எல்லும் எல்லியுமவன் இணையடி நினைந்து
உரோமஞ் சிலிர்ப்ப உரை, தடுமாற
ஆடிப் பாடி அன்பொடு வழுத்திக்
குஞ்சித பாதங் குறுகி வைகுதிரே.

புகைரத விபத்துக்கள்.

சென்ற செவ்வாய்க்கிழமை இங்கிலாந்திலே லிவர்ப்பூல் என்னுமிடத்தில் ஓர் பெரும் புகைரத விபத்துண்டாயது பலர்காயப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் கடுங்காயமுற்றனர்.

சென்ற செவ்வாய்க்கிழமை இங்கிலாந்திலுள்ள நியூபோட் என்னுமிடத்திலே ஒருபுகைரதவிபத்து நேர்ந்தது. பதினொருபேர் உடனே கொல்லப்பட்டனர். பலர் ஆபத்தானநிலையில் இருக்கின்றனர். அநேகர் காயமுற்றனர்.

சென்ற திங்கட்கிழமை அமெரிக்காவிலே ஒருபுகைரதத் தொடர் திறும் வண்டியுடன் மோதுண்டது. பத்துப்பேர் கொல்லப்பட்டனர். 30 பேர் கடுங்காயமுற்றனர்.

கடிதம்.

செந்தமிழ்ச் செல்வி.

பூரணலிங்கன் நூலாராய்ச்சியுண்மை.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தைச் சார்ந்த செந்தமிழ்ச்செல்வி இரண்டாஞ்சிலம்பு முந்நூற்றேழு முதலாவதுபக்கங்களிலாராயப்பெற்ற நூலாராய்ச்சியால் ஸ்ரீ சைவசமயாசாரியர்கள் செயல், சிறியவர் செயலெனவும், சமணர்கள் செயல், பெரியவர் செயலெனவும் மிகப் பலமாக எடுத்து ஆரவாரப்படுத்துகின்றது.

ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் சமணர்களுடைய இயல்புகளை வெளிப்படுத்திப் பாடியருளிய தேவாரப் பதிகங்களிற் சிலவாக்கியங்களை எடுத்துக் காட்டி, அவை சமயப் பகைகொண்டு கூறிய சீற்றமிஞ்சிய தேற்றச்சொல், மனவெரிச்சற்சொல், வடநூற் குற்றங்களை வெளியாக்கிய சமணரை யொழித்தல் தம் கடமையெனத் துன்புறுத்தினர், ஈனர் செயலன்றே அறிஞர் ஒவ்வாத நடை, மதமிஞ்சினால் நாக்குழறுத விபற்கையன்றே குய்யமாக்கள் வஞ்சகத்து ளகப்பட்டு, தன்றலைமேல் மண் பெய்து, பகைவர்க் கென்று மீளாவாளாகிய அந்தகச்செயல், தறுகணராவர், புலவர்தொழிலாகுமோ என்று ஆங்காங்கு சம்பந்தப் பிள்ளையார் தலையிற் குற்றங்கள் சுமத்தி எடுத்தெடுத்துப் போதித்துத் திரிகின்றது.

பிள்ளையார் சீற்றமிஞ்சிய தேற்றச்சொல், எரிச்சற் சொற்களால் சமணரைத் துன்புறுத்திய தன்மையானால் உலகம் பகைகொள்ளும். அரசன துகேட்டொறுத்துத் தன்னுணையினிறுத்தவன். அது கேட்கப்படாமையானும், உலகம் பிள்ளையார் பதிகவாக்கைக் கேட்டுத் தத்தம் குறைகளிந்கி, சுவாமிகளடிவணங்கி நிகரமையானும், அரசன் நீராலும் நெருப்பாலும் தன்னு பிள்ளையார் பதிகவாக்கிற் ெ பிள்ளையார்வசப்பட்டு யார் கூற்றுக்களைச் மனவெரிச்சலால் ணர்ச்சியாலாம்.

ள்ள குற்றங் மணரை பொழ றுத்தினர். ஈன சபுக்கும் உடம்பு லளித்து வாழ்வு ர் சமணரை யொழித் த க் கொள்ளின், தம்பதிக வாக்கா த விடுவார். அங்ஙனமொழித்தல் சேனாமையின் இவரிங்ஙன முணர்ந்ததும் திரிபுணர்ச்சியாலாம்.

குய்யமாக்கள் வஞ்சனையால் தந்தகைமையிழந்து, தந்தலைமேல் மண்பெய்து, பகைவர்க் கென்றும் மீளாவாளாகிய அந்தகச் செயல், தறுகணராவர் என்றார். இவர் கூறிய இவ்வித வியல்புகள் பிள்ளையாரிடத் துளவாயின், இவைகளெல்லாம் அவிச்சையின் வழிப்பட்ட ஆன்மச்செயல்களாகும். ஆன்மச் செயல்களுக்குத் திருவருட் பேறு பெறுத லாகாமையின் ஆண்டவனிடத்துப் பிள்ளையார் பெற்ற பொற்றாளம் ஞானப்பால் முதலான திருவருட்பேறுகள் வெளிப்படையாகலின் அடிகள் ஈனர் செயல் ஒவ்வாத நடைகளையுடையர் என்றதும் மேற்படி திரிபுணர்ச்சியாலாம்.

ஆண்டவனுக்கு மீளாவாளாய்ச் சிவப்பேறெய்திய காளிவேர்சை, பகைவர்க்கென்றும் மீளாவாளாய அந்தகச்செயலினரென்றதும் திரிபுணர்ச்சியாலாம். பிறவுமின்ன.

ஸ்ரீஞானசம்பந்தர்செயல்களெல்லாம் சிவன் செயல்கள். அருட்செயலாலன்றி யாகாமையின் கண்ணப்பர் செயல்போலவென வழிபடலவினும் வைத்தறியப்படும்.

இனி கருணைவடிவினர், ஆகமச்செல்வர், விழுமியநல்லொழுக்கர் தமுவினர். சகல மணமும் பொருந்தியவர் எனச்சமணரைச் சுவேமேற்கொண்டு புகழ்ந்தார். தருசேனர் ஆகே வென்ஞெரு பொய்க்க ரணஞ் சாட்டிச் சைவமதம் புகுந்தாரெனப் பொய்ம்மழக்கேற்றல் அதுகாரணமாக அவரைச்சிறையினிலிடல், நஞ்சூட்டல், யானையினாலுதைப்பித்தல், கல்லொடு கட்டிக் கடலிடையாழ்த்தல், நீற்றறையில் இடுதல் முதலிய சமண்செயலெல்லாம் அறிவுநூல் விதிக்கு விலக்காகிய கொடிய செயல்களாகலின் இச்செயலுடைய சமணரைக் கருணை வடிவினர், ஆகமச் செல்வர் என்றதும் திரிபுணர்ச்சியாலாம்.

குடிகளின் குற்றங்களை பொறுத்து நீக்கித் தன்னுணவழி நிறுத்தும் பூபாலர் போலவும், உயிர்களின் வினையை அருட்பார்வையால் தீர்த்துக் கனைவழி சேர்க்கும் பசுபதி போலவும், தம்மினஞ்சிறார் தாழ்வுகண்டு தடிப்படலே, கழுதைப்படலே, [illegible] என்று வைது மடித்தும் [illegible] தந்தை தாயர் போலவும், சாருவாக முதலிய நாஸ்தீக சமயமும் சைவத்தைவரைக்கு [illegible]

சமயங்களாதலால் அவ்வச்சமய நெறிகளின் பொய்த்தன்மைகண்டு அப்பொய் நெறியினின்றி நன்னெறி சேர்தலையும் பொருட்டு, மதிகேடர், செதக்குமனத்தர், பொக்கர் என்று அவரைப்பதிகங்களில் வைத்துக்கூறியது ஆசாரியப் பொது உரிமை கொண்டு குருசம்பிரதாயத்தாற் கூறிய கூற்றுக்களன்றி மதப்பகையால் மனவெரிச்சலால் அவரை ஒதுக்கக்கூறிய கூற்றுக்களல்லவென்பது.

உலகமும் பலவேறு சமயங்களும் சமயக்கடவுளரும் முழுமுதற்கடவுளும், ஒருகலாசாலையும் கலாசாலைவகுப்புக்களும் வகுப்பு உபாத்தியாயர்களும் முதலுபாத்தியாயரும் போலவென்பதைச்சைவநூலுண்மையுணர்ந்தவரறியாதிரார். கலாசாலையைப் பரீட்சைசெய்புங்கால் முதலுபாத்தியாயர் சொற்படிவழி நின்று ஒவ்வொருவகுப்பு மாணவர்களையும்பரீட்சித்து மேல்வகுப்புளிற் சேர்த்தியும் பண்டிதப்பட்டம் சிரோன்மணிப்பட்டம் கொடுத்துமகிழ்வித்தும்; பரீட்சையிற்றேருதமாணவர்கள் வெட்கமுண்டாகக் கவனித்துப்படித்து மேல்மேல் வகுப்புகளிற் சேரும்பொருட்டு அன்பு காரணமாக அவர்களை முன்னிலைப்படுத்தி நீ நல்ல புத்திமான், வயதென்னவாயிற்று, மிருகத்தேவை யில்லையே என்று பழித்து வையும் பரிசோதகர். இவர் பரீட்சையிற்றேருத மாணவர்களை பகைகாரணமாக ஒழித்தல் கடமையெனக்கொண்டு பழித்தாரெனக் கூறுவாரொருவருமின்மையின் அதுபோல முதல்வனருள்வழிநிற்கும் சமயாசாரியரும் அருணூல் விதிப்படி ஒழுகிவரு மக்களைத் தீட்சித்துச் சாலோகாதிபதங்களிற் சேர்த்தியும் சிவன்முத்தி பரமுத்தியடைந் தின்புறச்செய்தும், ஒழுகாத புறச்சமயத்தவர் அருணூல் விதியை யெய்திச் சாலோகாதி முத்தியடைந்துய்யும் பொருட்டு அன்புகாரணமாக நனர், அர்ச்சகர், என்றவர் பொய்யொழுக்கம் புலப்படுத்தி அந்நெறியை நீக்கும்படி செய்ததன்றி பகைமை காரணமல்லவென உலகமியிலேறியவற்றைப் பொருளினுமமைத்தார் காணப்படும்.

இங்ஙனந் நூலாராய்ச்சி பிள்ளையார்தமேயிற் குற்றஞ்சுமத்தி எடுத்துக்காட்டியவாக்கியங்கள் சொற்சம்பிரதாயம், இக [illegible] செயலினுஞ் சம்பிரதாய முள [illegible] செய்த அவையில் [illegible] விடுமென்று இ [illegible] செய்தவாதிர [illegible] ஸொவ்வொ [illegible] தின்டி தீ [illegible] தொசடரிச [illegible] ராக்கியருளி [illegible] வில் வைத்தந [illegible] வின்பமுலகம் செ [illegible] தேயாலதன்றிப் ப [illegible] கூற்றமல்லவென்பது.

ஆசையாலன்றே சம [illegible] கள் செய்த செயல்களெல்லாம் கடவுளும், வேந்தரும், உலகரும் விரும்பிநின்று அவ்வச் செயல்களுக்கு வேண்டுவன புரிந்துகொண்டதும்,

சைவசமயக் கடவுளாகிய சிவபெருமான் சாருவாக முதல் நாலாறு சமயங்களையெய்தி நிற்கும் ஆன்மாக்களின் மலத்தைச் சிருட்டி முதலிய கிருத்தியங்களால் நீக்கி தன்னடியிற் சேர்ப்பர். சைவசமயாசாரியர்களும் அந்நாலாறு சமயங்களை யெய்தி நிற்கும் மக்களுடைய தீநெறிகளைக் குருசம்பிரதாயத்தால் நீக்கி நன்னெறிப்படுத்தவர். வியாபக வறிவதிகாரத்தால், ஒரு கலாசாலைத் தலைமையுபாத்தியாயர் போல, எனவழியளவையினும் வைத்தறியப்படும்.

இங்ஙனஞ் செவ்வனே ஆராயாது, ஞானப்பிள்ளையாரையன்றிப்பிள்ளையார்செயல்களுக்கு, உவகைசெய்து அவர் வழிப்பட்டுநின்ற வேந்தரையும், முத்தச்சின்னமுதலிய அருட்கொடைகளைக்கொடுத்தருளிய சிவபெருமானையுமுடன்படுத்து நிந்தித்தாராயிற்று.

என்னை? வேந்தர், தம் பிரசைகளுக்கு அடாதன செய்தாரைச் சிறையில் வைத்தொறுத்துத் தண்ணேவழி நிறுத்தவர். அதுபோல 'விழுமியதவவொழுக்கத் தழுவிய' சமணருக்கு மதப்பகைகொண்டு தீங்கிழைத்த இச் சாதிவேந்தரையும் சிறையில்வைத்தொறுத்துத் தண்ணேவழிப்படுத்தாது மேலும் அக் 'கருணை வடிவினரைக் கழுவேற்றிக் கொல்லுமா றேவிவிட்டுக் கண்டுகொண்டிருந்தாராதலின், இப் பூபாலர், பட்சபாதகர், கொடுங்கோலர் என இராசநிந்தையும்,

கடவுளும் தீவினைசெய்தவுயிர்களை நரகத்தில் வைத்து வருத்துவதுபோல தன் நூல்விதிக்கு விலக்காகிய 'கொலைச்செயல், அந்தகச் செயல்' செய்த பிள்ளையாரையும் நரகத்தில் வைத்து வருத்தி அதிதீவினைப்பயனைப் பரிபாகப்படுத்தாமல் இவ்வுலகமும் மதிக்கும்படி பற்பல அருட்கொடைகளைக்கொடுத்தும் பின் நல்லூர்த் திருமணச்சேர்தியில் சிவைக்கியம் அளித்ததும், தன்னருள் நூல் விதிக்குவிலக்காகிய பிறசெயலாதலின்; முதல்வன் கடவுட் செயலுக்கு இழுக்கேயெனச் சிவநிந்தையுமாம்.

இன்னமும் இளமைப்பற்றி ஸ்ரீ அப்பர்சுவாமிகள் மாணிக்கவாசகசுவாமிகளையும் உடன்சேர்த்து நிந்தித்தாராயிற்று. அவர்களும் அவ்வக்காலத்தில் பரசமயங்களைத் தொலைத்த சமணபுத்தர்களைக் குருசம்பிரதாயத்தால் கண்டித்து அவர்களை நன்னெறிக்கேதுவாக்கினமையின்,

மேலும் யசக்கிருகாக்கினி நியாயமாக, 'குய்யமாக்கள் வஞ்சனையால் தப்பியதை மேன்மையிழந்து தெய்வத்தென்றும் மீளாவலமாகிய அந்தகச்செயலு' டைய இத்தகையார்க்குப் பெரியபுராணம், நான்மணிமாலை, பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களையியற்றினர்களை, இவர்களறிவிருந்தவாறென் எனச் சேக்கிழார் முதலிய தெய்வக்கவிஞரையும்,

'மாயாவாதப்பேயாவுனைக்குத், தேவரிலொருவரிருக்க, மேவரு நரகம் விடுத்தலேவரிது' எனவும், 'மாளுமதி கேடனாய் மாயாவாதிப், பேயாகி' எனவும், 'அறிவோடினன்றபாவி தலைநாணுமாளன்றேனோ' வெனவும் உமாபதிசிவம், அருணந்திசிவம், தாயுமானசுவாமிகள் முதலிய சந்தானகுரவர் முறையே பேயா, பேயகேடி-பாவி என்று புறச்சமயத்தவரை யதித்துரைத்தாராகலின், எம் சந்தான குரவரையும்,

'எல்லாரும் கடவுள் மக்கள், அவரவர் நிலைக்கேற்பக் கடவுளை வணங்குவர். இதற்காக வேறு சமயத்தாரை நிந்தித்த துன்புறுத்தல் அறிஞர் ஒவ்வாரென்று மின்னூலாராய்ச்சியார் கருத்தையறியாமல் குர்குலத்தில் வைஷ்ணமத கண்டனஞ்செய்த அகத்தியமுனிவர் முதலியோரையும் நிந்தித்தவாறுமாயிற்று.

இங்ஙனம் செந்தமிழ்ச்செல்வி தன் நூலாராய்ச்சியலில் ஷை நியாயமாக சிவநிந்தை, இராசநிந்தை, குருநிந்தை, சிவனடியார்நிந்தை, பௌராணிகர்நிந்தை, கவிஞர்நிந்தை, முனிவர்நிந்தை முதலிய நிந்தைகளைப்பண்ணிப் பாவமூட்டை கட்டிக்கொண்டதுமன்றித் தன் நூலாராய்ச்சியைக் கண்டகேட்ட ஆஸ்திகர்யாவரையும் கெங்காயாத்திரைக்குப் போகும்படி பிரயாணப்படுத்தியும் விட்டதே. ஆச்சரியம், ஆச்சரியம்.

மாட்சி, ஆகம அநுமான அளவைகளானும் ஆன்றோராராய்ச்சியானும் தொன்றுதொட்டுப் பயின்றுவந்த உண்மைகளை நாஸ்திகர்களும் கொள்ளாநிரார்.

'உலகத்தாருண்டென்பதில்லென்பான்வையத்
தலகையா வைக்கப்படும்'

'எந்தை கோயிலில் திருமுறை மண்டப மெடுத்துத், தந்த பீடிகைத் தலத்தின்மேற் திருமுறை தந்து, சிந்தை அன்பினோடு ஆங்கதற் கருச்சனை செய்து, துந்து மேற்றினன் பிரதிட்டை கோடியொப் புறுமால்'. என உபதேசகாண்டமும் திருமுறைப் பெருமைக்களவிலை யென்றது.

'ஆன்முலையறுத்த வரனிலோர்க்கும், குரவர்த்தப்பிய கொடுமையோர்க்கும், வழுவாய்மருங்கிற் கழுவாயுமுளவே, நிலம்புடைபெயர்வதாயினுமொருவன். செய்திகொன்றோர்க் குய்தியில்லென்றறம் பாடின்றேயாயிழை கணவ; என்பது முய்த்துணரற்பாலது.

இங்ஙனம் செந்தமிழ்ச்செல்வி நூலாராய்ச்சி சிவபெருமானையும் சைவத் தலைவர்களெல்லாரையும் நகையுள்கைத்து, தன் கருத்தாவையும் சைவக்குலத்துட் நகைவைப்பித்து, பிரசுரகர்த்தாரண்ட பாலசரபலத்தையுங் கொடுத்ததே. பரிதாபம்! பரிதாபம்!!

செந்தமிழ்ச்செல்வி தான் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தைச் சார்ந்திருந்துகொண்டு சைவசமயத்துக்குக் கேடுசூழ்வாரோடு உறவாடி நிற்பது இவளுக்குத் தகுதியல்லவே.

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலுஞ் சுந்தரனும், சிற்கோல வாதவூர்த் தேசிகனும்-முற்கோலி, வந்திலரேல் நீறெங்கே மாமறைநூலெங்கே, எந்தைபிரானைந்தெழுத் தெங்கே

முருக தாசன்,
ஸ்ரீ திருச்செந்தூர்.

விற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் 19287 ம் இலக்க வழக்கில் ௧௯௨௪ஞு ஐப்பசிமீ 30 ந் தேதியைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணிகள் ௧௯௨௪ஞு மார்கழிமீ 13உ சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்.

தற்போது இந்தியாவிலிருக்கும்
பி. கு. நா. நாகப்பச்செட்டி
பி. கு. நா. நாகப்பச்செட்டி - இவர்களின் அற்றேணித் தத்துவகாரன் வண்ணார்பண்ணை மேற்கு பி. கு. நா. வீரையாநாயுடு வழக்காளி.

எதிராக

1. காரைதீவு கிழக்கு கந்தர் ஆறுமுகம் தனக்காகவும் காலஞ்சென்ற தனது மனைவியின் 4549 ம் இலக்க உரிமைத்தத்துவவழக்கில் நியமிக்கப்பட்ட தத்துவகாறனாகவும்
2. ஷை ஆறுமுகம் முத்துவேலு
3 ஷை பூபாலு மகள் பாக்கியம் சிறுபாரயப்-பராமரிப்பு 1 ம் எதிராளி

எதிராளிகள்.

1. பச்சிலைப்பளியைச் சேர்ந்த முகமாலையிறை "முத்தையாகாடு" 18 ஏக்கர் 1 றூட் 6 பேட்ச. ஷை இளையான்புளியடியும் மறு பிரிவுகளும் பர. நில இலா. 320. ஷை உப்புக்கேணி பிரிவு இரண்டு எட்சாட்டியும் பரயங்காடும் பர. நில இலா. 91¼. ஷை திடல் நல்ல மாலான வளவும் மறு பிரிவுகளும் பர. நில இலா, 53¼. கொத்தக்கூடல் பர. நில இலா. 8. ஆகப் பர. நில இலா. 61¼. ஷை புங்கடியும் மறு பிரிவுகளும் பர. நில இலா. 12. ஷை பொருக்கன்காடும் எட்சாட்டியும் பர. நில இலா. 21. ஷை பொருக்கன்காடும் எச்சாட்டியும் பர. நில இலா, 75. ஆகக் கூடிய மொத்தம் 54 ஏக்கர் 2றூட் 11பேட்ச. தென்னைகளும் அரவுகளும் பனைகளும். ஆனால் அளவின்படி 61 ஏக்கர் 7 பேட்ச. இதற்கு எல்லை கிழக்கு கந்தர் முருகேசவுக்குரிய ஆதனமும் தொமஸ் கோடனுக்குரிய ஆதனமும்; வடக்கு தொமஸ் கோடனுக்குரிய ஆதனம்; மேற்கு தொமஸ் கோடனுக்குரிய ஆதனமும்கனகசபை குணரத்தினத்துக்கும் பங்காளருக்குமுடைய ஆதனமும்; தெற்கு தெரு. இவ்வெல்லைக்குட்பட்டகாணி அடங்கலும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

2. ஷையிறை "முத்தையாகாடு" 15 ஏக்கர் 3 றூட் 9 பேட்ச. தென்னைகளும் தரவுகளும். இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும் தெற்கும் மண்தெரு. மேற்கு கந்தர் ஆறுமுகத்துக்குரிய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட காணி அடங்கலும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

3. ஷையிறை "முத்தையாகாடு" 26 ஏக்கர் 35 பேட்ச. இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை; வடக்கு கந்தன் முருகனுக்கும் கந்தர் ஆறுமுகத்துக்குமுடைய ஆதனமும் மண்தெருவும்; மேற்கும் தெற்கும் மண்தெரு; இவ்வெல்லைக்குட்பட்ட காணி அடங்கலும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

க. சிவப்பிரகாசம்,
கொம்மிஷனர்.

டிஸ்திறிக்கோடு
யாழ்ப்பாணம் 3-11-1924.
(Mis. 552).

காணி விற்பனவு

1921–22 ம் ஆண்டின் கிலாபச் சாராயக் குத்தகைகாரராகிய கி. கதிரேசபிள்ளையும் மறுபேரும் அக்குத்தகைக்குப் பிணையாகக் கொடுத்த ஆதனங்களையும் வீடுகளையும் யாழ்ப்பாணம் பெரியகோட்டில் 19183 ம் இலக்க முடிக்குரிய வழக்கில் விடப்பட்ட வெலியாத்தின் பிரகாரம் இந்தமாதம் 24 ம் 25 ம் திகதிகளில் தினமும் காலமே 10 மணியளவில் யாழ்ப்பாணம் பிசுக்கால்துரை யவர்கள் விற்பர். முதலீட்டுறுதியின் பேரால் உள்ள தீர்ப்பின் பேரால் இவ்விற்பனவு நடத்தப்படும்.

இவ்வாதனங்களில் ஈடுவைத்தவர்களுக்கு உள்ள உரித்தை முடிக்குரிய நியாயதுரந்தரர்கள் பரிசோதித்துப் பெறுமதியெனத் தீர்த்தபின்தான் அவ்வாதனங்கள் பிணையாக ஏற்கப்பட்டது.

வண்மேற்கிலிருக்கும் கொட்டடித்திடல்வயல், பள்ளுவிலித்தோட்டம் (6 துண்டுகள்) வெள்ளைச்சூரிதத்தையும் வெள்ளைச்சூரியனும் 24 ம் திகதி விற்கப்படும். மேலும் மேற்படி வண்மேற்கிலிருக்கும் பள்ளுவிலித்தோட்டம் (8 துண்டுகள்) 25 ம் தேதி விற்கப்படும். இக்காணிகளினது முழு விபரங்களும் யாழ்ப்பாணம் பிசுக்காலிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

F. J. Smith,
வடமாகாணக்
கவண்மேந்து ஏசன்டு.

யாழ்ப்பாணம்
கச்சேரி
3–11–24.
(G. 445).

விளம்பரம்.

1924-ம் வருஷப் புது இண்டியன் இண்டஸ்டிரிடன் கண்காட்சியில் முதல் தரமாக யோக்கிதா பத்திரம் பெற்றது.

இளமையும் பலமும்

வீரமும் வன்மையும்,

என்னும் வீரிய விர்த்தி மாத்திரைகளினல் ஒரே மணி நேரத்தில் உண்டாகும் வீரமற்ற இளைஞரும் பலங்குன்றிய வயோதிகரும் சித்திக்ப சுகம் அடைய இதுவே மருந்து.

20 மாத்திரைகள் ரூபா. ஒன்று 1.

காமகேசரி பார்மஸி
412. (R) தங்கசாலைத்தெரு.
(Y. 37.) சென்னை.

பிரபஞ்ச சுகத்திற்கு திவ்விய ஔஷதம்!

2 மணிநேரத்தில் அபூர்வ குணம்!!

இந்த மருந்து இராத்திரிவேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீரியம் எவ்வளவு நீற்றுப்போயிருந்தாலும் அதைக் கெட்டிப்படுத்தி 2 மணி நேரத்திற்குள் அதிகமான ரதி சக்தியைக் கொடுக்கும்.

மூன்று நாள் சாப்பிட்டால் வீர்ய நஷ்டம் எவ்வளவு காலமாக இருந்தபோதிலும் அதைத் தவறாமல் கட்டுப்படுத்தும். இரண்டு புட்டிகள் சாப்பிட்டால் தாப்பாலஸத்தினு லுண்டாகும் நபும்ஸகத்வம் போக்கி நரம்புகளுக்கு அதிக பலத்தைக்கொடுத்து அதிகமான யௌவனத்தைக் கொடுக்கும். ஒருமுறை தருவித்து உபயோகித்தால் இதன் குணம் தங்களுக்கே தெரிய வரும். கடிதங்கள் ரகஸ்யமாய் வைக்கப்படும். 20 மாத்திரைகள் கொண்ட சீசா 1-க்கு ரூபா 2—0—0 வி. பி. தபா [illegible] வேறு.

ஆர் [illegible]
38. (H) டை [illegible]
(Y. 33.)

பல தலைமுறையாய் பிரபலப்ரசித்தியடைந்த
வீ. ஸாமி அய்யங்காருடைய

அரைக்கீரை விரைத் தைலம்.

இதன் குணம்.

பித்த மேகரோகம் சிரசுக்கேறி அதனாற் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினுல் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, சரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், சொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த கோட்டுசில் காணப்படாத எழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் நீக்கி அனுகூலப்படுத்தும் மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்துஸ்நானம்பண்ணினுல் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்தேய்த்து ஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்து கொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாறாது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக்கூடாது. 10 பலங் கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

பாக்கிங் போஸ்டேச் பிரத்தியேகம் வெளிநாடுகளுக்கு வீ. பீ. இல்லாததால் முற்பணம் அனுப்பவேண்டும்.

வி: எஸ். கோமளத்தம்மாள்,
மானியுபாக்சரர்,
(Y 26) 8, பிராடீஸ் ரஸ்தா, மைலாப்பூர்.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.